Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 170/2022 PW-1**

Name : கோபன்னா
Father / Husband name : ராமச்சந்திரன்
Village : திண்டிவனம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused absent. Petition u/s 317 BNSS filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் திண்டிவனம் செஞ்சி ரோட்டிலுள்ள டாஸ்மாக்கடையில் விற்பனையாளராக வேலை செய்கிறேன். கடந்த 2021 ம் வருடம் ஒருநாள் நான் மேற்படி பணியிலிருந்தபோது அன்றையதினம் மாலை சுமார் 6, 7 மணியளவில் டாஸ்மாக்கடை முன்பாக யாரோ ஒருவர் இலவசமாக மதுபானம் கேட்டு பிரச்சனை செய்தார். அந்தயிடம் கூட்டமாக இருந்தது. யார் பிரச்சனை செய்தது என நான் கேட்டபோது அங்கிருந்த வாடிக்கையாளர் மணிமாறன் என்று கூறினார். பிரச்சனை செய்தவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலாது. சந்தேகத்தின்பேரில் மணிமாறன் மீது ரோசணை காவல் நிலையத்தில் மறுநாள் காலை புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 28.09.2021 அன்று மாலை 7 மணியளவில் நான் பணியலிருந்தபோது ரோசணையை சார்ந்த மணிமாறன் (எ) ராஜ்குமார் பணம் கொடுக்காமல் மதுபானம் கேட்டு பிரச்சனை செய்தார் என்றும், கடன் தர முடியாது என்று நான் தெரிவித்தபோது என்னை தகாத வார்த்தையால் திட்டி, நாட்டு வெடிகுண்டு போட்டு கொன்றுவிடுவதாக மிரட்டி, ஒரு பிராந்தி பாட்டிலை கடையிலிருந்து எடுத்துச்சென்றார் என்றும், நான் பயந்துகொண்டு உடனடியாக புகார் கொடுக்காமல் சற்று நேரத்திற்கு பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம், கடையிலிருந்த பாட்டில் 1 ஐ எடுத்துச்சென்றுவிட்டார், அந்த நபர் அவ்வாறு மிரட்டியதாக சத்தம் மட்டும் கேட்டது, நான் அவரை பார்க்கவில்லை. எதிரி என்னை தகாத வார்த்தையால் திட்டி மிரட்டினாரா என்றால் இல்லை.

<u>எதிரி குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 170/2022 PW-2**

Name : ஆனந்தன்
Father / Husband name : சௌந்தரராஜன்
Village : தழுதாளி
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused absent. Petition u/s 317 BNSS filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் திண்டிவனம் மெயின் ரோட்டிலுள்ள டாஸ்மாக்கடையில் மேற்பார்வையாளராக வேலை செய்கிறேன். கடந்த 28.09.2021 அன்று நான் செஞ்சி ரோட்டிலுள்ள எண் - 552 டாஸ்மாக்கடையில் மேற்பார்வையாளராக வேலையிலிருந்தபோது மாலை சுமார் 7 மணியளவில் டாஸ்மாக்கடை முன்பாக சத்தமாக இருந்தது, நான் வெளியில் வந்து பார்த்தபோது யாரோ ஒருவர் இலவசமாக மதுபானம் கேட்டு பிரச்சனை செய்தபோது நான் வந்து விசாரித்தேன். அந்த சமயத்தில் கடை முன்பாக சுமார் 50 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். நான் பொதுவாக கேட்டேன். கூட்டத்தில் மணிமாறன் இருந்ததால் அவர் தான் மதுபானம் இலவசமாக கேட்டார் என்று விற்பனையாளர் கோபன்னா என்னிடம் சொன்னார். சம்பவம் சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார், அதன் பேரில் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 28.09.2021 அன்று மாலை 7 மணியளவில் நான்

பணியலிருந்தபோது ரோசணையை சார்ந்த மணிமாறன் (எ) ராஜ்குமார் பணம் கொடுக்காமல் மதுபானம் கேட்டு பிரச்சனை செய்தார் என்றும், கடன் தர முடியாது என்று நான் தெரிவித்தபோது அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் திட்டி, நாட்டு வெடிகுண்டு போட்டு கொன்றுவிடுவதாக மிரட்டி, ஒரு பிராந்தி பாட்டிலை கடையிலிருந்து எடுத்துச்சென்றார் என்றும், அ.சா.1 பயந்துகொண்டு உடனடியாக புகார் கொடுக்காமல் 30.09.2021 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. எதிரி என்னை தகாத வார்த்தையால் திட்டி மிரட்டினாரா என்றால் இல்லை.

**<u>எதிரி குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 170/2022 PW-3**

Name : அய்யனார்
Father / Husband name : அய்யம்பெருமாள்
Village : ஆசாரங்குப்பம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused absent. Petition u/s 317 BNSS filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் திண்டிவனம் செஞ்சி ரோட்டிலுள்ள எண் - 11552 டாஸ்மாக்கடையில் விற்பனையாளராக வேலை செய்கிறேன். கடந்த 28.09.2021 அன்று வேலையிலிருந்தபோது மாலை சுமார் 6 மணியளவில் வாடிக்கையாளருக்கு மதுபானம் விற்பனைசெய்தபோது கூட்டத்தில் யாரோ ஒருவர் கடையிலிருந்த ஒரு பாட்டிலை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். கூட்டத்தில் யார் எடுத்துச்சென்றார் என்று தெரியவில்லை. சம்பவம் சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார், அதன் பேரில் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 28.09.2021 அன்று மாலை 7 மணியளவில் நான் பணியலிருந்தபோது ரோசணையை சார்ந்த மணிமாறன் (எ) ராஜ்குமார் பணம் கொடுக்காமல் மதுபானம் கேட்டு பிரச்சனை செய்தார் என்றும், கடன் தர முடியாது என்று அ.சா.1 தெரிவித்தபோது அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் திட்டி, நாட்டு வெடிகுண்டு போட்டு கொன்றுவிடுவதாக மிரட்டி, ஒரு பிராந்தி பாட்டிலை

கடையிலிருந்து எடுத்துச்சென்றார் என்றும், அ.சா.1 பயந்துகொண்டு உடனடியாக புகார் கொடுக்காமல் 30.09.2021 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல, கூட்டத்தில் பின்னால் இருந்து யாரோ ஒருநபர் மிரட்டுவதாக சத்தம் கேட்டது. எதிரி என்னை தகாத வார்த்தையால் திட்டி மிரட்டினாரா என்றால் இல்லை, பொதுவாக சத்தம் போட்டார்.

**<u>எதிரி குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.